[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2010 ஏப்ரல் 28

இதுவரை 17 மாவட்டங்களுக்கு முழுமையாகவும், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு 90 சதவிகிதமும் வழங்கப்பட்டது.

தற்போது மத்திய அரசு விடுவித்த எஞ்சிய தொகையான ரூ.51.618 கோடி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக முழுமையாக வழங்கப்படும் என்று இந்தப் பேரவைக்கு அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அறிவிப்பு

செல்ஃபோன் இயக்கம் நிறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது cell phone - செல்லிடத் தொலைபேசியை off செய்துவிட்டு பேரவைக்குள் வரவேண்டுமென்று ஏற்கெனவே சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. இருப்பினும், பேரவையில் சிலர் செல்லிடத் தொலைபேசியை உபயோகிப்பதாக நான் அறிகிறேன். எனவே, பேரவைக்குள் வரும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றும் அலுவல் காரணமாக வரும் அலுவலர்களும் செல்லிடத் தொலைபேசியை off செய்துவிட்டு பேரவைக்குள் வருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

8. நிஷா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்து அறிவித்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம், என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதிலே மீதமிருந்த தொகை தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு வழங்கப்படும் என்றும், அதற்கான நிதியையும் ஒதுக்கி, இங்கே விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்ற

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அந்த மாவட்ட விவசாயிகளின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.865,45,37,000/- மூலதனக் கணக்கில் ரூ.23,89,22,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.3,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.865,45,37,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,89,22,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."